அடையாள இலக்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2012

அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition - Australian Society of Graduate Tamils

## எழுத்தறிவுப் போட்டி - பகுதி 1 & பகுதி 2

<u>மத்தியபிரிவு</u>
(8-10) வயதுப் பிரிவு)

காலம்: மு.ப. 9.30 மணி, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : 1:30 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| மொத்தப்புள்ளிகள் | |

# <u>பகுதி 1</u>

(1). **கோடிட்ட இடங்களைப் பொருத்தமான ஓர் எழுத்தைக் கொண்டு நிரப்புக.**

(10 புள்ளிகள்)

1. வெ ____ ளிக் கிழமை
2. மாண ____ ர்
3. ம ____ சள் நிறம்
4. மா ____ பழம்
5. நீல வா ____ ம்
6. மல்லி____ ப்பூ
7. அர____ ங்கம்
8. தொடர் மா____ வீடு
9. து____ முகம்
10. விவா____ அரங்கு

| புள்ளிகள் | |
|---|---|

(2). **கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந் தெடுத்து எழுதுக.**

(10 புள்ளிகள்)

1) என் தம்பி வளர்க்கும் ______________________________ உணவு கொடுக்க வேண்டும்.
அ) மீனை ஆ) மீன் இ) மீனா ஈ) மீனுக்கு

2) பயணிகள் ______________________________ நோக்கி ஓடுகிறார்கள்.
அ) பேரூந்தில் ஆ) பேரூந்தை
இ) பேரூந்திலிருந்து ஈ) பேரூந்துக்கு

3) என் ______________________________ விளையாடுவது யார்?
அ) தங்கையோடு ஆ) தங்கையை
இ) தங்கையுடைய ஈ) தங்கைக்கு

4) ஓவியக் கண்காட்சியை ______________________________ பார்க்க முடிந்ததா?
அ) உன்னை ஆ) உன்னால் இ) உன் ஈ) உன்னுடன்

5) நான் நாள் தோறும் ______________________________ பாடசாலைக்கு நடந்து செல்வேன்.
அ) வீட்டுக்கு ஆ) வீட்டில்
இ) வீட்டிலிருந்து ஈ) வீட்டோடு

| புள்ளிகள் | |
|---|---|

(3) **வாக்கியத்தில் கோடிட்ட சொல்லுக்கு ஒத்தகருத்துள்ள சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

(10 புள்ளிகள்)

1. வாத்திய இசை அந்த நிகழ்ச்சிக்கு <u>அணி</u> செய்தது.

அ) அலங்காரம் ஆ) ஆபரணம்
இ) பணி ஈ) புதுமை

2. அந்தக் <u>குன்றில்</u> ஏறியது மறக்க முடியாத அனுபவமாகும்.

அ) ஏணியில் ஆ) மரத்தில்
இ) மலையில் ஈ) தேய்வில்

3. அந்த இழப்பின் கவலையில் இருந்து <u>தேறுதல்</u> கடினம்.

அ) நிச்சயித்தல் ஆ) தெளிதல்
இ) மாறுதல் ஈ) யோசித்தல்

4. எமது வீடு பாடசாலைக்கு <u>அண்மையில்</u> உள்ளது.

அ) தூரத்தில் ஆ) எதிரில்
இ) முன்னிலையில் ஈ) சமீபத்தில்

5. இரவு வானத்திற்குத் <u>தாரகைகள்</u> அழகூட்டுகின்றன.

அ) நட்சத்திரங்கள் ആ) கோள்கள்
இ) வான்வெள்ளிகள் ஈ) விண்வெளிக் கலங்கள்

| புள்ளிகள் | |
|---|---|

**(4) கீழேயுள்ள வாக்கியங்களில் கோடிட்ட வினைச்சொல் ஒவ்வொன்றின் காலத்தையும் மாற்றி எழுவாய் பயனிலை இயைபு குன்றாமல் அதன் அடியிலுள்ள வாக்கியத்தை நிரப்புக.**

(20 புள்ளிகள்)

1) நேற்று நான் என் நண்பன் வீட்டில் காலை உணவு <u>உண்டேன்.</u> இப்பொழுது நாங்கள் எமது வீட்டில் உணவு

______________________

2) கலை விழாவில் மாணவர்கள் <u>பங்குபற்றுவார்கள்.</u> நேற்றைய கலை விழாவில் மாணவர்கள் ___________________________________

3) வெடிச்சத்தம் கேட்டால் சிறுவர்கள் <u>பயப்படுவர்</u>.

சென்ற வாரம் வெடிச்சத்தம் கேட்டுச் சிறுவன் ___________________

4) நாளை தங்கை அரங்கில் <u>ஆடுவாள்</u>. சென்ற வருடம் நான் அரங்கில் ___________________________________

5) நேற்று அவர் என்ன <u>செய்தார்</u>?

நாளை நீங்கள் என்ன ___________________________________?

| புள்ளிகள் | |
|---|---|

# <u>பகுதி 2</u>

**(5) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமான வற்றைத் தேர்ந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையில் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(20 புள்ளிகள்)

அழகான ஒரு நாட்டிலே அது ஒரு சிறிய ______________________

அங்கு எலிகளின் ______________________ மிகவும் கூடுதலாக இருந்தது. நகர மக்கள் இந்த எலிகளைத் துரத்தித் தரும்படி

______________________க் கேட்டனர். அந்த வேளை பார்த்து

______________________ மனிதன் ஒருவன் அங்கு வந்தான். தனக்குப் பொருத்தமான கூலி தந்தால் எலிகளைத் துரத்துவேன் என்றான்.

நகரபிதா அவனது வேண்டுகோளுக்கு ______________________. அவன் ஒரு குழல் எடுத்து ஊத எலிகள் யாவும் அவனைத் தொடர்ந்து

சென்றன. அவன் ஒரு ______________________ சென்று நின்றதால், அவனைத் தொடர்ந்து சென்ற எலிகள் யாவும் குளத்தில் விழுந்து

இறந்தன. குழலூதி ______________________ கேட்டான். நகரபிதா

கொடுக்க மறுத்தார். மனம் ______________________ குழலூதி புதிய இசை ஒன்றை ஊதினான். நகரச் சிறுவர்கள் அவனைப் பின்

தொடர்ந்தார்கள். ______________________ பெற்றோர் மீண்டும் நகரபிதாவிடம் முறையிட்டனர். தனது தவறை உணர்ந்த நகரபிதா குழலூதிக்குக் கூலியைக் கொடுத்தார். சிறுவர்கள்

______________________ சென்றனர்.

(1) குளத்தில் (2) நகரபிதவை
(3) வருந்திய (4) தொல்லை
(5) செய்வதறியாத (6) கூலியை
(7) பெற்றோருடன் (8) விநோத
(9) சம்மதித்தார் (10) நகரம்

| புள்ளிகள் | |
|---|---|

(6) **படங்களைக் கவனமாகப் பார். கருத்தைப் புரிந்துகொள். 10 வாக்கியம் எழுதுக.**

(30 புள்ளிகள்)



<u>நண்பரின் பிறந்தநாள்</u>

1. வயது ஒன்பது
2. நண்பரின் அழைப்பு
3. வீடு அலங்கரிக்கப்பட்டிருந்தது
4. மாலை நேரம்
5. பரிசுகள் கொடுத்தோம்.
6. கேக் வெட்டினார்.
7. நண்பரின் தங்கை
8. ஆடல் பாடல்
9. சந்தோஷமாக
10. விளையாட்டுகள்
11. இரவுணவு பரிமாறினர்
12. புகைப்படங்கள்

| புள்ளிகள் | |
| --- | --- |